<u>**DEPOSITION OF WITNESS**</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.1024/2024
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.5
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | கிருஷ்ணமூர்த்தி | -- | |
| Father's Name | சுப்புராமன் | Calling | |
| Village | தென்காசி | Religion | |
| Taluk | தென்காசி | Age | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of January 2026.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 2 வதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 30.11.2023 ம் தேதி இரவு 10.15 மணிக்கு மாயத்தேவன்பட்டி விலக்கு அருகில் நானும், எனது நண்பர் கௌரி சங்கரும் சிவகாசியில் இருந்து வந்து கொண்டிருந்தபோது அன்று மாலை விபத்து நடந்ததாக கூறி அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக கையெழுத்து போடச்சொன்னார்கள், நானும் கௌரி சங்கரும் சாட்சி கையெழுத்து போட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் சம்பவ சமயத்தில் மருந்து விற்பனை பிரதிநிதியாக வேலை பார்த்து வந்தேன். அப்போது நான் இராமச்சந்திராபுரத்தில் உள்ள எனது மாமா வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். அ.சா.1 கண்ணராஜ் தான் எனது மாமா. அன்று மாலை விபத்து நடந்ததாக கூறி கையெழுத்து கேட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவ சமயத்தில் சாட்சி கௌரி சங்கர் B.Pharm படித்து முடித்துவிட்டார். நான் அன்றையதேதியில் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், விபத்தில் இறந்தவர் எனது மாமா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பார்வை மகஜரில் என் மாமா அழைத்துக் கொண்டு கிருஷ்ணன்கோவில் காவல் நிலையம் சென்று கையெழுத்துபோட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் இன்னொரு சாட்சி தேவை என்பதால் எனது நண்பர் கௌரிசங்கரை அழைத்துச் சென்று அவரும் கையெழுத்துபோட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ

இடத்திற்கு செல்லவில்லை என்பதால் தான் அந்த இடத்தில் என்ன இருந்தது என்று போலிசார் விசாரணையில் என்னால் சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.01.23 17:40:31 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**